சுருக்கம்

அரசு போக்குவரத்துக் கழகங்கள் – அரசு போக்குவரத்துக் கழக தொழிலாளர்களுக்கு தொழிற்தகராறு சட்டம், 1947 பிரிவு 12(3)–ன்கீழ் ஊதிய ஒப்பந்த பேச்சுவார்த்தை – 12வது ஊதிய ஒப்பந்தத்திற்கான பேச்சுவார்த்தையில் கலந்துக்கொள்வதற்கு நிர்வாக தரப்பில் குழு ஒன்று அமைத்து ஆணை வெளியிடுதல்.

---

போக்குவரத்து (சி1) துறை

அரசு ஆணை (நிலை) எண்.1 நாள் 02.01.2015

ஜய, மார்கழி 18,
திருவள்ளுவர் ஆண்டு 2045

படிக்க

1. அரசாணை (நிலை) எண்.359, போக்குவரத்து (சி1) துறை, நாள் 08.12.2010.
2. அண்ணா தொழிற்சங்கப் பேரவை மற்றும் பிற தொழிற்சங்கங்கள் தொடுத்துள்ள உச்ச நீதிமன்ற வழக்கு எண்.சிசி 16146/2010 மற்றும் 2185, 2186/2011.
3. தொழிலாளர் முன்னேற்ற சங்கப் பேரவை பொதுச் செயலாளரின் கடித நாள் 30.12.2014.

--

ஆணை

போக்குவரத்துக் கழக தொழிலாளர்களுக்கு தொழில் தகராறு சட்டம் 1947 பிரிவு 12(3)–ன் கீழ் ஊதிய ஒப்பந்த பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டும். அதன்படி, 1977–ம் வருடம் முதல் ஊதிய ஒப்பந்தங்கள் நடைபெற்று வருகின்றன. அவ்வகையில், 11வது ஊதிய ஒப்பந்தம் சென்னை உயர்நீதிமன்றம் டிவிசன் பெஞ்ச் மேல்முறையீட்டு எண்.1425/2006–ல் வழங்கிய தீர்ப்பின்படி வாக்கெடுப்பு நடத்தி, தேர்வு செய்யப்பட்ட தொழிலாளர் முன்னேற்ற சங்கப் பேரவையுடன் 22.01.2011 அன்று கையெழுத்தானது. மேற்கண்ட உயர்நீதிமன்ற தீர்ப்பினை எதிர்த்து அண்ணா தொழிற்சங்க பேரவை உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தது. அவ்வழக்கு தற்போது நிலுவையில் உள்ளது.

2. இந்நிலையில், மேற்படி ஒப்பந்தம் 31.08.2013 அன்று முடிவடைவதால், 12வது ஊதிய ஒப்பந்தத்திற்கான பேச்சுவார்த்தையினை உடனடியாக துவக்குமாறு பல்வேறு தொழிற்சங்கங்கள் அரசுக்கு கோரிக்கை விடுத்தன.

3. கடந்த 30.12.2014 அன்று 12வது ஊதிய ஒப்பந்தத்திற்கான பேச்சுவார்த்தைக்கு அனைத்து தொழிற்சங்கங்களையும் அழைத்து பேச தங்களுக்கு ஆட்சேபனை இல்லை என தொழிலாளர் முன்னேற்றச் சங்க பேரவை கடிதம் அளித்தது.

4. மேற்கண்ட சூழ்நிலையில், அனைத்து போக்குவரத்துக் கழக தொழிற்சங்கங்களின் கோரிக்கைகளை அரசு கவனத்துடன் பரிசீலனை செய்து, அரசு போக்குவரத்துக் கழக ஊழியர்களுக்கு 12வது ஊதிய ஒப்பந்தத்திற்கான பேச்சுவார்த்தையில் நிர்வாக தரப்பில் கலந்து கொள்வதற்கு பின்வரும் உறுப்பினர்களைக் கொண்ட குழு ஒன்றினை அமைத்து அரசு இதன்வழி ஆணையிடுகிறது :

| வ. எண் | பதவி | துறை / போக்குவரத்துக் கழகம் | உறுப்பினர் |
|---|---|---|---|
| 1. | டாக்டர் பு. உமாநாத், இ.ஆ.ப., அரசு கூடுதல் செயலர், | நிதித் துறை. | உறுப்பினர் |
| 2. | நிர்வாக இயக்குநர் | மாநகர் போக்குவரத்துக் கழகம், சென்னை–2. | உறுப்பினர் செயலாளர் / கூட்டுநர். |
| 3. | நிர்வாக இயக்குநர் | அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம், சென்னை–2. | உறுப்பினர் |
| 4. | நிர்வாக இயக்குநர் | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், விழுப்புரம் | உறுப்பினர் |
| 5. | நிர்வாக இயக்குநர் | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், சேலம் | உறுப்பினர் |
| 6. | நிர்வாக இயக்குநர் | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், கோயம்புத்தூர் | உறுப்பினர் |
| 7. | நிர்வாக இயக்குநர் | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், கும்பகோணம். | உறுப்பினர் |
| 8. | நிர்வாக இயக்குநர் | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், மதுரை | உறுப்பினர் |
| 9. | நிர்வாக இயக்குநர் | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், திருநெல்வேலி | உறுப்பினர் |
| 10. | இணை நிர்வாக இயக்குநர். | தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம், சென்னை–2. | உறுப்பினர் |
| 11. | முதுநிலை துணை மேலாளர் (நிர்வாகம்). | தலைவர் அலுவலகம், போக்குவரத்துத் துறை, சென்னை–9 | உறுப்பினர் |

(ஆளுநரின் ஆணைப்படி)

த.பிரபாகரராவ்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்
அனைத்து உறுப்பினர்கள்.
நகல்
அனைத்து போக்குவரத்துக் கழக நிர்வாக இயக்குநர்கள்,
இயக்குநர், சாலை போக்குவரத்து நிறுவனம், சென்னை–113.
இணை நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம், சென்னை –2.

..3..

முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், போக்குவரத்துத்துறை அவர்களின் முதன்மை தனிச் செயலாளர், சென்னை–9.
நிதி (பொ.மா.க) துறை, சென்னை–9.
போக்குவரத்துக் கழக தொழிற்சங்க பிரதிநிதிகள்
(வழி – நிர்வாக இயக்குர், மாநகர் போக்குவரத்துக் கழகம், சென்னை–2)
இருப்பு கோப்பு / உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்